**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXV ,BNSS)

| | |
|---|---|
| Case No. | : CC No.733/2025 |
| Deposition of witness for Prosecution | : P.W– 1 |
| Name | : மகேந்திரன், வயது 26 |
| Father Name/Husband Name | : ராமசந்திரன் |
| Village | : லிங்கம்பட்டி |
| Taluk | : கோவில்பட்டி |
| Calling | : கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of February 2026.

**(A1 – A3 present. A4 absent. 355 BNSS petition filed and allowed ).**

**முதல் விசாரணை**

1 நான் தற்போது லிங்கம்பட்டியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் இல்லாத 4 வது எதிரியை எனக்கு தெரியும். 1 வது எதிரி எனது வீட்டின் அருகே வந்து தண்ணீர் வரவில்லை என்று சண்டை செய்துவிட்டு சென்றுவிட்டார். பின்பு 01.04.2025 அன்று இரவு 12.30 மணிக்கு பெருமாள்பட்டியில் உள்ள எனது வீட்டின் அருகே எதிரிகள் நான்கு பேரும் வந்து 1 வது எதிரி கம்பியை வைத்து எனது வலது காலில் அடித்தார். 2 வது எதிரி கம்பால் வலது பக்கம் கன்னத்தில் அடித்தார். 4 வது எதிரி அரிவாளால் எனது வலது கண்ணுக்கு கீழே வெட்டினார். 2 வது எதிரி டியூப்லைட் சட்டத்தால் எனது வலது பக்க இடுப்பில் அடித்தார்.

2 எனது அப்பா, அம்மாவை எல்லாரும் அடித்தார்கள். என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டி, விரட்டி, விரட்டி அடித்தார்கள். நான் கோவில்பட்டி அரசு மருத்துவமனைக்கு வந்து ஒரு வாரம் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

3 என்னுடைய வீட்டிற்கு தென்பகுதியில்தான் 1 வது எதிரியின் ஆட்டுதொழுவம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், 1 வது எதிரியின் தொழுவத்திற்கும் பொதுபாதைதான் உள்ளது என்றால் சரிதான்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்பு நான் குடிபோதையில் ஏசி கொண்டிருந்ததாக 1வது எதிரி நாலாட்டின்புதூர் காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த புகார் சம்பந்தமாக நானும், பஞ்சாயத்து தலைவரும் நாலாட்டின்புதூர் காவல் நிலையத்திற்கு சென்று சமரசம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4 சம்பவம் சமயத்தில் நான் குடிபோதையில் பிரச்சனை செய்ததாக புகார்மனுவில் உள்ளது என்றால் சரிதான், நான் வீட்டில்தான் பிரச்சனை செய்தேன், எதிரிகளிடம் நான் பிரச்சனை செய்யவில்லை. சம்பவ காலத்தில் மாரியப்பன் என்பவருடைய பேத்திக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றது என்றால் சரியல்ல. லிங்கம்பட்டி – சென்னியம்பட்டி ரோட்டில்தான் காளியம்மன் கோவில் உள்ளது என்றால் கடைசியில் உள்ளது. மேற்படி சாலையானது கிழமேல் சாலை. மேற்படி சாலையில்தான் கிழமேல் சாலை என்று சொல்வார்கள். போலீசார் விசாரணையில் காளியம்மன் கோவில் சாலையில் வைத்து சம்பவம் நடந்ததாகதான் சொன்னேன் என்றால் காளியம்மன் கோவில் போகிற வழியில் எனது வீட்டின் அருகே சம்பவம் நடைபெற்றதாக சொன்னேன்.

5 காளியம்மன் கோவிலுக்கும், நான் குடியிருக்கும் வீட்டிற்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 50 அடி தொலைவுக்குள் இருக்கும். சம்பவம் நடந்தவுடன் எனக்கு இரத்தம் வந்து சட்டையில் இரத்தம் பட்டது என்றால் சரிதான். அந்த இரத்தம்பட்ட சட்டையை போலீசாரிடம் ஒப்படைத்தேன். சம்பவம் நடந்த 30 நிமிடத்தில்தான் போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரியல்ல, அதன் பிறகுதான் வந்தார்கள். நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. இதே வழக்கு சம்பவத்தில் எனது தந்தைக்கும், தாயாருக்கும் காயம் ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டது. எனது பெற்றோர்களும் கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார்கள் என்றால் சரியல்ல. எனக்கு தலையில் காயம் ஏற்பட்டதால் நான் மயக்கம் ஆகி விட்டேன் என்றால் சரிதான். எனவே நடந்த சம்பவத்திற்கு போலீசார் எனது தந்தையை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரியல்ல.

6 என்னை கோவில்பட்டி அரசு மருத்துவர் பரிசோதித்தபோது இடுப்பில் காயங்கள் இருந்ததாகவோ, நெற்றியில் வெட்டுகாயம் இருந்ததாகவோ நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு மருத்துவரிடம் சொல்லாத நிலையில் தற்போது அவ்வாறு சொன்னதாக முதல்முறையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் என்னை தவிர்த்து வேறு நபர்கள் இருந்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் எனது பெற்றோர்கள் கூட இருந்தார்கள்.

7 எனது வலது முட்டியில் உள்ள காயமானது அதிக மதுபோதையின் காரணமாக நான் தடுமாறி விழுந்ததால்தான் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் தினமும் மதுபோதையில் குடித்துவிட்டு வந்து தகராறு செய்வது வாடிக்கை என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக 1வது எதிரி மற்றும் ஊர் பெரியவர்கள் என் மீது பலமுறை புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. அதை மனதில் வைத்து நான் குடிபோதையில் கீழே விழுந்ததை மனதில் வைத்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம்

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. K. Anand, B.A, M.L.,
Judicial Magistrate No.1,
Kovilpatti.